www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi9S

# தென்காசி மாவட்டம்
## முழு ஆண்டுத் தேர்வு - 2025

21-04-25

-----

**வகுப்பு 9**

**அறிவியல்**

காலஅளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 75

**பகுதி - I**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **12×1=12**

1) திசைவேகம் - காலம் வரைபடம் உள்ளடக்கும் பரப்பளவு எதனைப் பிரதிபலிக்கிறது?
அ) நகரும் பொருளின் திசைவேகம் ஆ) நகரும் பொருள் அடைந்த இடப்பெயர்ச்சி
இ) நகரும் பொருளின் வேகம் ஈ) நகரும் பொருளின் முடுக்கம்

2) ஒரு கம்பியின் மின்தடை எதைப் பொறுத்து அமையும்?
அ) வெப்பநிலை ஆ) வடிவம்
இ) பாய்வு விளைவு ஈ) காந்தவிளைவு

3) முப்பட்டகம் ஒன்றின் வழியே ஒளிக்கற்றை பாயும்போது, அது
அ) எதிரொளிக்கப்படுகிறது ஆ) விலகலடைகிறது
இ) நிறப்பிரிகை அடைகிறது ஈ) விலகலடைகிறது மற்றும் நிறப்பிரிகை அடைகிறது

4) வெப்பக் கடத்தல், வெப்பசலனம், வெப்பக்கதிர்வீச்சு ஆகியவற்றின் மூலம் ஏற்படும் வெப்ப இழப்பைக் குறைக்கும் கருவி
அ) சூரிய மின்கலம் ஆ) சூரிய அழுத்த சமையற்கலன்
இ) வெப்பநிலைமானி ஈ) வெற்றிடக்குடுவை

5) நவீன தனிம அட்டவணை ஒரு தனிமத்தின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகள் அவற்றின் ............ இன் ஆவர்த்தன செயல்பாடாகும் எனக் கூறுகிறது
அ) அணு எண் ஆ) அணு நிறை இ) ஒத்த தன்மை ஈ) முரண்பாடு

6) வெளிக்கூட்டில் எட்டு எலக்ட்ரான்களுடன் நிலைத்த எலக்ட்ரான் அமைப்பைப் பெற்ற தனிமங்கள் ........
அ) ஹேலஜன்கள் ஆ) உலோகங்கள் இ) மந்த வாயுக்கள் ஈ) அலோகங்கள்

7) நீரேற்றப்பட்ட காப்பர் சல்பேட்டின் நிறம் ..........
அ) சிவப்பு ஆ) வெள்ளை இ) நீலம் ஈ) ஆரஞ்சு

8) நான்கு அறைகளையுடைய இதயம் கொண்ட விலங்கினைக் கண்டறிக
அ) பல்லி ஆ) பாம்பு இ) முதலை ஈ) ஓணான்

9) ஒளிச்சேர்க்கையின் போது நடைபெறுவது
அ) $CO_2$ இழுக்கப்பட்டு $O_2$ வெளியேற்றப்படுகிறது
ஆ) நீர் ஒடுக்கமடைதல் மற்றும் $CO_2$ ஆக்ஸிகரணம் அடைதல்
இ) நீர் மற்றும் $CO_2$ இரண்டுமே ஆக்ஸிகரணம் அடைதல்
ஈ) $CO_2$ மற்றும் நீர் இரண்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

10) மனித உடலின் சில தேவைகளைப் பூர்த்தி செய்ய குறைந்த அளவே (மைக்ரோ) தேவைப்படும் ஊட்டச்சத்து
அ) கார்போஹைட்ரேட் ஆ) புரோட்டீன்
இ) வைட்டமின் ஈ) கொழுப்பு

11) மஞ்சள் காமாலையால் பாதிக்கப்படும் உறுப்பு
அ) கல்லீரல் ஆ) நுரையீரல் இ) சிறுநீரகம் ஈ) மூளை

12) Slide களை தொகுத்து முறைப்படுத்தி காட்சிப்படுத்துவது .............
அ) Slide Show ஆ) Charts இ) Page ஈ) Messages

**பகுதி - II**

**II. எவையேனும் 7 வினாக்களுக்கும் விடையளி** **7×2=14**
**(கட்டாய வினா எண்: 22)**

13) சீரான இயக்கம் குறித்து நீங்கள் அறிந்தது என்ன?

14) ஜூலின் வெப்ப விளைவின் அடிப்படையில் வேலை செய்யும் கருவிகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக

15) மண்பானையில் வைத்திருக்கும் தண்ணீர் எப்போதும் குளிராக இருப்பது ஏன்?

16) நவீன தனிமை அட்டவணையில் தொகுதிகள் மற்றும் வரிசைகள் என்பவை யாவை?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17) **பொருத்துக**

| | | |
|---|---|---|
| i) மும்மை விதி | - | நியூலாந்து |
| ii) கார உலோகம் | - | கால்சியம் |
| iii) எண்ம விதி | - | ஹென்றி மோஸ்லே |
| iv) கார மண் உலோகம் | - | சோடியம் |
| v) நவீன ஆவர்த்தன விதி | - | டாபர்னீர் |

18) தனிமங்கள் எவ்வாறு மந்த வாயுக்களின் எலக்ட்ரான் அமைப்பிற்கு மாறுகின்றன?

19) பாரிஸ் சாந்தின் பயன்களைக் கூறு

20) இரு சாதாரண கொசுக்கள் மற்றும் அவைகள் பரப்பும் நோய்களின் பெயர்களைத் தருக

21) லிப்ரே ஆபிஸ் இம்ப்ரஸ் என்றால் என்ன?

22) காற்றில் ஒளியின் திசைவேகம் $3\times10^{8}$மீ/வி கண்ணாடியில் $2\times10^{8}$ மீ/வி எனில் கண்ணாடியின் ஒளிவிலகல் எண் என்ன?

## பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கும் விடையளி (கட்டாய வினா எண்: 32)** **7×4=28**

23) நிறை மற்றும் எடையை வேறுபடுத்துக

24) அ) மின் மோட்டாரின் முக்கியப் பகுதிகளைப் பட்டியலிடுக

ஆ) DCயை விட ACயின் சிறப்பியல்புகளைக் கூறுக

25) நியூக்ளியான் என்றால் என்ன? பாஸ்பரசில் எத்தனை நியூக்ளியான்கள் உள்ளன? அதன் அணு அமைப்பை வரைக

26) அமிலம் மற்றும் காரம் ஆகியவற்றைக் கண்டறியும் சோதனையை விவரி

27) அ) கார்பன் தேதியிடல் என்றால் என்ன?

ஆ) மயக்கமூட்டிகள் என்றால் என்ன? அவை எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

28) மீன்களின் சிறப்பு பண்புகள் ஏதேனும் ஐந்தினைப் பட்டியலிடுக

29) முதிர்ச்சியடைந்த மனிதனில் காணப்படும் பற்களின் பெயர்களை எழுதி, அவற்றின் பணிகளைக் குறிப்பிடுக

30) இந்தியாவிலுள்ள உணவுக் கட்டுப்பாட்டு நிறுவனங்களின் பங்கினை விவரி

31) தேனின் மருத்துவ முக்கியத்துவத்தைப் பட்டியலிடுக

32) கெப்ளரின் விதிகளை வரையறு

## பகுதி - IV

**IV. *விரிவான விடையளி.* (அனைத்து வினாக்களுக்கும் விடையளி)** **3×7=21**

33) அ) காற்றழுத்தமானியின் அமைப்பு மற்றும் செயல்படும் விதத்தை விவரிக்கவும்

**(அல்லது)**

ஆ) i) நெருக்கங்கள் மற்றும் அழுத்தங்கள் எவ்வாறு உண்டாகின்றன படத்துடன் விளக்குக

ii) நீயும் உனது நண்பனும் நிலவில் இருக்கிறீர்கள். உனது நண்பன் ஏற்படுத்தும் ஒலியை உன்னால் கேட்கமுடியுமா?

34) அ) i) டிண்டால் விளைவு மற்றும் பிரௌனியன் இயக்கம் ஆகியவற்றை தகுந்த வரைபடத்துடன் விளக்குக

ii) பதங்கமாதல் - வரையறு

**(அல்லது)**

ஆ) ஆபத்தான மூன்று ரெசின் குறியீடுகள் எவை? அவற்றின் தன்மையை விவரி

35) அ) i) மைட்டாஸிஸ் மற்றும் மியாசிஸ்க்கு இடையேயுள்ள வேறுபாட்டினைப் பட்டியலிடுக.

ii) பாலினப் பெருக்கத்தின்போது ஏன் கேமிட்டுகள் மியாஸிஸ் மூலம் உருவாக வேண்டும்?

**(அல்லது)**

ஆ) நீர்ச் சுழற்சியில் உள்ள செயல்பாடுகளை விவரி

- - - - - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com